# காயல்பட்டணம் நகராட்சி

## 2022-2023 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## 1. ஆட்சி எல்லை:

இந்நகராட்சி ஆட்சி செலுத்தும் காயல்பட்டணம் நகரம் மன்னார் வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ளது. புல எண் 5-22, 23,27-32, 32-40, 134, 139, 167, 265 மற்றும் 568-684 நீங்கலாக காயல்பட்டணம் தெற்கு, 35 வடக்கு, வருவாய் கிராமங்கள் 28 பகுதியாகும். இந்நகர் வளர்ச்சியடைந்து படிப்படியாக 27.1.1886 ஊராட்சி, 24.04.1952 முதல் நிலை பேரூராட்சி, 15.10.1982 முதல் தேர்வுநிலை பேரூராட்சியாக இயங்கி தற்போது 14.6.2004 தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அரசு ஆணை எண் 270 நாள் : 11.06.2004-ன் படி உயர்ந்து இருக்கிறது. அதன்பின்பு, அரசு ஆணை எண் 158 நாள் :- 09.08.2010-ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்ந்து செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

## 1(அ) அமைப்பு:

காயல்பட்டணம் நகராட்சியின் நகர பரப்பளவு 12.50 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

## 1(ஆ) மக்கள் தொகை:

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரத்தின் மக்கள் தொகை 40588 ஆகும்.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட விபரப்படி ஆணையளர்கள் பணியாற்றினார்கள்.

1. பா.குமார்சிங்-ஆணையாளர்.

## 2. வார்டு பிரிவின் செயல்முறை:

தமிழக அரசின் உத்தரவின்படி, உள்ளாட்சி தேர்தல் நடைபெறாததால் ஆணையர் தனிஅலுவலர் பதவி வகிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய உத்தரவின்படி 18 வார்டுகளுக்கும் வார்டு மறுவரையரை செய்யப்பட்டது. அதன்படி, வார்டு எண் 9 தாழ்த்தப்பட்ட பெண்களுக்காகவும், வார்டு எண்கள் 1,4,5,7,8,11,12, மற்றும் 13 ஆகிய 8 வார்டுகள் பெண்கள் (பொது)வார்டாகவும் 2,3,6,10,14,15,16,17,18 பொது வார்டாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2(அ)கூட்டங்கள் 2022-2023

அறிக்கையாண்டில் தனிஅலுவலர் அவர்களால் கீழ்க்கண்டவாறு மன்றக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1. சாதாரணக் கூட்டங்கள் 12
2. அவசர கூட்டங்கள் 09

மேற்குறிப்பிட்ட மன்றக் கூட்டங்களில் 302-பொருட்கள் பரிசீலித்து முடிவு செய்யப்பட்டது.

## 3. நிர்வாகம்:

| பொது பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் பின்வருமாறு | | | பொது பிரிவின் கீழ் பணிபுரிந்த பணியாளர்களின் விபரம் பின்வருமாறு: | | |
|---|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | 1. | மேலாளர் | 1 |
| 2. | உதவியாளர் | 1 | 2. | உதவியாளர் | 1 |
| 3. | இளநிலை உதவியாளர்கள் | 5 | 3. | இளநிலை உதவியாளர்கள் | 3 |
| 4. | பதிவறை எழுத்தர் | 1 | 4. | பதிவறை எழுத்தர் | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 3 | 5. | அலுவலக உதவியாளர் | 1 |
| 6. | வருவாய் ஆய்வாளர் | 1 | 6. | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 7. | வரிவசூலர்கள் | 3 | 7. | வரிவசூலர்கள் | 3 |
| **பொறியியல் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் பின்வருமாறு:** | | | **பொறியியல் பிரிவில கீழ் பணிபுரிந்த பணியாளர்களின் விபரம் பின்வருமாறு:** | | |
| 1. | நகராட்சி பொறியாளர் | 1 | 1. | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2. | பணி ஆய்வர் | 1 | 2. | பணி ஆய்வர் | 0 |
| 3. | பணிமேற்பார்வையாளர் | 1 | 3. | பணிமேற்பார்வையாளர் | 1 |
| 4. | பிட்டர் | 1 | 4. | பிட்டர் | 1 |
| 5. | மேல்நிலை தொட்டி காவலர் | 1 | 5. | மேல்நிலை தொட்டி காவலர் | 1 |
| **சுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் பின்வருமாறு:** | | | **சுகாதாரப் பிரிவில கீழ் பணிபுரிந்த பணியாளர்களின் விபரம் பின்வருமாறு:** | | |
| 1. | சுகாதார ஆய்வாரள் | 1 | 1. | சுகாதார ஆய்வாரள் | 1 |
| 2. | சுகாதாரமேற்பார்வையாளர் | 2 | 2. | சுகாதார மேற்பார்வையாளர் | 2 |
| 3. | துப்புரவுபணியாளர்கள் | 33 | 3. | துப்புரவு பணியாளர்கள் | 18 |
| 4. | ஓட்டுநர் | 1 | 4. | ஓட்டுநர் | 1 |
| **நகரமைப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்ட பதவிகள் பின்வருமாறு:** | | | **நகரமைப்பு பிரிவில் கீழ் பணிபுரிந்த பணியாளர்களின் விபரம் பின்வருமாறு:** | | |
| 1. | நகரமைப்புஆய்வர் | 1 | 1. | நகரமைப்பு ஆய்வர் | 1 |

## 4. போக்குவரத்து:

### பேரூந்து நிலையங்கள் :

இந்நகராட்சியில் ஒரு பேரூந்து நிலையம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நவீன வசதிகளுடன் பேரூந்து நிலையம் அமைக்கப்பெற்றுள்ளது.

## 5.சாலைகள்:

**ரோடுகள், பாலங்கள், ஓடைக்கரைகள், கட்டிடங்கள்:**

31.03.2023 ல் இருந்த படி நகராட்சி நிர்வாகப் பொறுப்பில் இருந்த ரோடுகளும், தெருக்களும் மொத்தம் நீளம் 36.506 கி.மீ.ஆகும்

பலவகை ரோடுகளும், அவைகளின் நீளம் விபரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மணல் ரோடுகள் | 6.26 கி.மீ. |
| 2. | சரள் போடப்பட்ட ரோடுகள் | 4.79 கி.மீ. |
| 3. | தார் ரோடுகள் | 48.97கி.மீ. |
| 4. | சிமெண்ட் கான்கீரிட் ரோடுகள் | 7.4 கி.மீ. |
| | மொத்தம் | 67.42 கி.மீ. |

காயல்பட்டணம் நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் நகராட்சி பொது நிதியில் வருடம் 2022-23 ம் நிதியாண்டில் நகராட்சியில் உள்ள மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள தார்சாலைகளை மேம்பாடு செய்தல், சிமெண்ட் கல் பதித்து சாலை அமைத்தல் மற்றும் நகராட்சியின் இதர பணிகள் (NSMT- 190.00) போன்ற பணிகள் ரூ.190.00 இலட்சம் ஒப்பந்தபுள்ளி கோரப்பெற்று நடவடிக்கையில் உள்ளது.

### வணிக வளாக கட்டிடங்கள்:

நகராட்சி வருவாயை பெருக்கும் பொருட்டு வணிக வளாகம் 8 கடைகள் மற்றும் பேருந்து நிலையத்தில் 13 கடைகள் வாடகைக்கு விடப்பட்டு நகராட்சிக்கு மாத வருமானம் முறையில் நடப்பு ஆண்டில் வாடகையாக ரூ. 13.26. இலட்சம்/- வசூல் செய்யப்பட்டது.

## தெருவிளக்குகள்:

தமிழ்நாடு மின்வாரியம் - நகராட்சி மின்சார கம்பிகள் போடப்பட்டுள்ள அனைத்து தெருக்களுக்கும் மின்விளக்குகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் தெருக்களில் போடப்பட்டு பராமரிக்கப்பட்ட விளக்குகளின் எண்ணிக்கை 1629 ஆகும். விளக்குகளின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 119 |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 150 |
| 3. | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1152 |
| 4. | சி.எப்.எல்.விளக்குகள. | 160 |
| 5. | இதரவிளக்குகள் | 48 |
| | | 1629 |

தேவையான இடங்களில் புதியதாக மின் விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பள்ளிகளும், மாணவர்களின் எண்ணிக்கையும்:**

இந்நகராட்சி எல்லைக்குள் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி-1, அரசு உதவி பெறும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி 1, அரசு உதவிபெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 2, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள் - 4, அரசு உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள்-4, ஆண்களும், பெண்களும் சேர்ந்தாற்போல் பயிலும் மேல்நிலைப்பள்ளி 1ம் உள்ளது.

**ஆண்களுக்கு:**

1. சென்ட்ரல் மேல்நிலைப்பள்ளி
2. எல்.கே. மேல்நிலைப்பள்ளி
3. முகைய்தீன் மேல்நிலைப்பள்ளி

**பெண்களுக்கு:**

1. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி
2. சுபைதா பெண்கள் மேல்நிலைப்பள்ளி

உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3225 ஆகும். மாணவிகளின் எண்ணிக்கை 3015 ஆகும்.

**பிரத்தியேகப் பள்ளிகள்:**

தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கற்பிக்கும் 1 பிரத்தியேகப் பள்ளி இந்நகரத்திலுள்ளது. கணினி பயிற்சிக்கு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் நடப்பு ஆண்டில் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஆண்களுக்கான அரபிக் கல்லூரிகள் 2 மற்றும் பெண்களுக்கான அரபிக் கல்லூரிகள் 3 உள்ளன.

இந்நகர்மன்றத்தால் நூலகம் ஏதும் நடத்தப்படவில்லை. ஆனால் தூத்துக்குடி சரகம் நூலக ஆணைக்குழுவினரால் பேருந்து நிலைய வளாகத்தில், கிளை நூலகம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சொத்துவரியில் பொது நிதிவரிவருவாயில் ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய்க்கு 0.10 பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்பட்டுவருகிறது.

**வாசக சாலைகள் :**

இந்நகராட்சிக்குட்பட்ட அருணாசலபுரத்தில் திருவள்ளுவர் படிப்பகம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1. முகைதீன் பள்ளிவாசல் அருகில்
2. ஜலாலியா சங்கம் படிப்பகம்
3. பெரியபள்ளி படிப்பகம் (நயினார் தெரு)
4. தீவுத்தெரு லு.ரு.கு. படிப்பகம்
5. ரெட் ஸ்டார் சங்கம்

**கல்லூரிகள்:-**

நகராட்சிப் பகுதியில் ஒரே ஒரு பெண்கள் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

**பொது சுகாதாரம்:**

**துப்புரவு:**

நகரில் 2 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் செப்டிக் டாங்குகள், கழிப்பிடங்கள் 10 இருக்கைகள் ஆண்களுக்கும், 10 இருக்கைகள் பெண்களுக்குமாக அமைந்துள்ளது. பொதுக் கழிப்பிடங்களுக்கு மின்சார வசதியும், தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் குப்பை கூளங்கள் அப்புறப்படுத்த, லாரிகள் உபயோகப்படுத்தப்பட்டன. சேகரிக்கப்படும் குப்பைகள் உப இடங்களில் குவிக்கப்பட்டு பின்பு அங்கிருந்து லாரிகள் மூலம் நகராட்சி உரக்கிடங்கிற்கு நேரடியாகக் கொண்டு செல்லப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசு அடிப்படை வசதித் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்ட 3 டிப்பர் லாரிகள் கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்தப் படுகிறது.

தெருக்கள் இந்நகராட்சி துப்புரவு பணியாளர்கள் 18 நபர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் 90 நபர்களைக்கொண்டு காலையிலும், மாலையிலும் சுத்தம் செய்யப்படுகின்றன. குப்பை கூளங்கள் தினமும் சேகரிக்கப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டு, மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பையிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது.மேலும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகாக 48 நபர்களைக்கொண்டு இந்நகர் முழுவதும் வீடுவீடாக அபெட் மருந்துகள் ஊற்றப்பட்டு கொசுப்புழுக்களை ஆய்வு செய்து அழிக்கப்பட்டு வருகிறது.

**கழிவுநீர்**

இந்நகராட்சி கழிவுநீர் ஓடைகள் ஏதும் இல்லை.

நகர தூய்மை தொழிலாளர்கள் வாழ்க்கை நிலை போதிய அளவு திருப்திகரமாக உள்ளது எனச் சொல்லலாம். அவர்கள் சொந்த குடியிருப்பு வீடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்கின்றனர். ஆண் தொழிலாளர்களுக்கு 2 முழுக்கால் சட்டையும், 2 மேல் சட்டையும் கொடுக்கப்படுகின்றன. ஒரு ஜோடி காலணியும் கொடுக்கப்படுகிறது. பெண் பணியாளர்களுக்கு 1 ஜோடி சேலையும், 1 ஜோடி சட்டையும், 1 ஜோடி செருப்பும் கொடுக்கப்பட்டது. குடியிருப்பு வீடுகள் கிடைக்ககப்பெறாதவர்கள் அடியில் கண்ட இடங்களில் வசிக்கின்றனர்.

1. வண்டிமலைச்சியம்மன் கோவில் தெரு(செல்வ விநாயகபுரம்)
2. குலாம் சாகிப் தம்பி தோட்டம்(திருவள்ளுவர் தெரு)

வண்டிமலைச்சியம்மன் கோவில் தெரு (செல்வவிநாயகபுரத்தில்) பேவர்பிளாக் ரோடுகள் உள்ளன. பெரும்பான்மையாக நகரை தூய்மை தொழிலாளர்கள் அரசாங்க நிலங்களில் வீட்டு மனைகள் பெற்று அவைகளில் தங்களுக்கு என குடியிருப்புகள்

கட்டியுள்ளனர். நகர்மன்றத்தின் சார்பில் பொது குடிநீர்குழாய்களும், வீட்டுகுடிநீர் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

**உரம் உற்பத்தி:**

இந்நகராட்சி பகுதி சிவன்கோவில் தெரு பகுதியில் நுண் உரக்குடில் ஒன்று அமைக்கப்பட்டு மக்கும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மற்றும் கடையக்குடி பகுதியில் உள்ள நுண் உரக்குடில் ஒன்று அமைக்கப்பட்டு மக்கும் குப்பைகள் சேகரிக்கப்பட்டு உரம் மற்றும் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது .

**அபாயகரமானதும், ஆட்சேபனைகரமானதுமான தொழில்கள்:**

இந்நகர்பகுதிகளில் வியாபாரங்களுக்கான அனுமதி கொடுப்பதில் அவைகள் உற்பத்தி செய்யும் இடங்கள் மாவுப் பதார்த்தங்கள் விற்பனை பானங்கள் தயாரித்தல் போன்றவைகள் குறித்து மிகக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவை சுத்தமான சுகாதாரமுறையில் நடத்தப்படுகின்றனவா என்று கவனிக்கப்படுகிறது.

**சந்தைகளும், திருவிழாக்களும்:**

இந்நகரில் அறிக்கை செய்யப்பட்ட சந்தைகளோ, பண்டிகைகளோ ஒன்றுமில்லை. ஆனால் ஒவ்வொரு வருடமும் நான்கு கோவில் விழாக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வருடமும் ஜுன் மாதம் மரைக்காயர் கந்தூரியும், மார்ச் மாதம் ஜாவியா கந்தூரியம், அக்டோபர் மாதம் புகாரி கந்தூரியும், மேமாதம் தைக்கா சாகிபு கந்தூரியும் நடைபெறுகின்றன.

பண்டிகைக் காலங்களில் சுகாதார ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. எவ்விதமான நன்கொடையும் கோவில் நிர்வாகிகளிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. நடப்பாண்டில் இவ்வகைக்கு நகரமன்றத்திற்கு ஏற்பட்ட செலவு ஏதுமில்லை. யாத்திரிகர்கள் வரி வசூலிக்கப்படவில்லை.

**குடிநீர் விநியோகம்:**

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக முறை உள்ளது. இந்நகரில் இருந்து 35 கிலோ மீட்டருக்கு அப்பால் பொன்னன்குறிச்சி பகுதி தாமிரபரணி ஆற்றுப்படுகையிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறது.

ஆற்றுப்படுகையில் ஆறு நீர் உறிஞ்சும் கிணறுகளும் ஒரு நீர் சேகரிக்கும் தரைமட்ட கிணறும் உள்ளது. 100 எச்.பி. திறன் சக்தியுள்ள மின்மோட்டார்கள் பம்புசெட்டுகள் இரண்டு செட்டுகள் உள்ளது. இதன் மூலமாக தினமும் சுமார் 44.30 லட்சம் லிட்டர் 350 எம்.எம். பிரதான குழாய்கள்( டி.ஐ.) மூலம் பம்பிங் செய்யப்பட்டு 23.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் வந்து சேருகிறது.

## நீர்த்தேக்கத்தொட்டிகளின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. பேருந்துநிலைய வளாகம் | : | 3,00,000லிட்டர் |
| 2. நகராட்சி அலுவலக வளாகம் | : | 4,00,000லிட்டர் |
| 3. ரெட் ஸ்டார் சங்கம் | : | 2,00,000லிட்டர் |
| 4. அண்ணாநகர் | : | 10,000லிட்டர் |
| 5. அழகாபுரி | : | 60,000லிட்டர் |
| 6. காயிதேமில்லத் நகர் | : | 30,000லிட்டர் |
| 7. உச்சினிமாகாளி அம்மன் கோவில்தெரு | : | 60,000லிட்டர் |
| 8. கோமான்புதூர் | : | 60,000லிட்டர் |
| 9. அருணாசலபுரம் | : | 60,000லிட்டர் |
| 10. ஓடக்கரை | : | 60,000லிட்டர் |
| 11. கற்புடையார்பள்ளிவட்டம் | : | 60,000லிட்டர் |
| 12. இரத்தினாபுரி | : | 60,000லிட்டர் |
| 13. தேங்காய் பண்டகசாலை | | 60,000லிட்டர் |
| 14.ஓடக்கரை வடக்கு தெரு | | 60,000லிட்டா |
| 15.தாயிம்பள்ளி வளாகம் | | 60,000லிட்டா |
| 16.லெட்சுமிபுரம் | | 60,000லிட்டா |
| 17.கீழலட்சுமிபுரம் | | 400000 லிட்டர் |
| 18.மொகதும்ம் தெரு | | 2.00லட்சம் லிட்டர் |
| 19.இரட்டைகுளத்துப்பள்ளி வளாகம் | | 1.00 லட்சம் லிட்டர் |

மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் வீட்டு இணைப்புகளுக்கும், வியாபார ரீதியான இணப்புகளுக்கு ரூ.100/- வீதமும், கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

### பாதாள சாக்கடைத் திட்டம்:

இந்நகராட்சிபகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஏதும் இல்லை.

### பொதுசுகாதாரமும், பாதுகாப்பும் (பலவகை):

நகரில் தீயணைக்கும் நிலையம் இல்லை. அருகில் உள்ள திருச்செந்தூர் பகுதியில் இருந்தும் டி.சி.டபிள்யூ. நிறுவனத்திலிருந்தும் தீயணைப்பு வண்டிகள் உண்டு. இதில் ஒரு ஆம்புலன்ஸ் பிரிவும் உண்டு. இது நகரத்தில் ஏற்படும் தீ விபத்தைத் தடுக்க உதவுகிறது.

## வெறிநாய்க்கடி தவிர்ப்பு:

வெறிநாய்க்கடிக்காக சிகிச்சை ஏதும் இவ்வாண்டில் கொடுக்கப்படவில்லை. காயல்பட்டணம் அரசினர் மருத்துவமனையில் வெறிநாய்க்கடிக்காக சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் வெறிநாய்க்கடியால் மாண்டவர் எவரும் இல்லை. மேலும் வெளியில் சுற்றித் திரியும் நாய்களை பொதுமக்களின் புகாரின் அடிப்படையில் பிடித்து கருத்தடை அறுவை சிகிட்சை மற்றும் வெறிநோய் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

## ஆடுமாடு அடிக்கும் இடம்:

இந்நகராட்சி பகுதி பப்பரப்பள்ளியில் ஆடு, மாடு அடிக்கும் இடம் நவீன வசதியுடன் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பணியாளர்கள் கொண்டு ஆடுகள் அடிப்பதற்கான கட்டணம் ஆடு ஒன்றுக்கு ரூ.20/- ம், ஒரு மாடு அடிப்பதற்கான கட்டணம் ரூ.30/-.ம் வசூலிக்கப்படுகிறது.

## தொழிற்சாலைகளும், தொழில்களும்:

வருடம் முழுவதும் இயங்கும் தொழிற்சாலைகளும், குறித்த பருவ காலங்களில் இயங்கும் தொழிற்சாலைகளுமான பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் நடப்பு ஆண்டில் செயல்பட்டு வருகின்றன. நகரத்தில் சுரங்கங்கள் ஒன்றுமில்லை.

## மரம் நடுதல்:

ஏறத்தாழ 3.3. கி.மீ. நீளமுள்ள வீதிகளில் மரஞ்செடி தொட்டிகள் பராமரிக்கப்பட்டன. வருடம் ஆரம்பத்தில் மரங்களின் எண்ணிக்கை 200 ஆக இருந்தது. இந்த ஆண்டில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டன.

## நகரமைப்பு பிரிவு:

### 1. உள்ளூர்த் திட்டக் குழுமம்:

இந்நகராட்சியில் உள்ளூர்த் திட்டக் குழுமம் ஏற்படுத்தப்படவில்லை.

### 2. விரிவு அபிவிருத்தித் திட்டம்:

இந்நகராட்சியில் விரிவு அபிவிருத்தித் திட்டம் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

நகராட்சியில் நகரளவு வேலைகள் 1952 ஆண்டு முடிக்கப்பட்டு நகரளவு தஸ்தாவேஜுகள் நகரளவரிடமும் மற்றொரு பிரதி நகரமைப்பு (தாலுகா அலுவலகம்) பிரிவிலும் ஆக பராமரிக்கப்பட்டு வருகிறது.

## ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை:

நடப்பு ஆண்டில் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளின் மீது நடவடிக்கை தொடரப்பட்டு நகராட்சி ரோடுகள், தெருக்களில் வைத்துள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் அகற்றப்பட்டுள்ளது.

## கட்டிட விண்ணப்பங்கள்:

01.04.2023 ம் தேதி முதல் கட்டிட அனுமதி மற்றும் இதர அனுமதிக் கட்டணங்கள் 01.04.2023ம் தேதிய தீர்மானத்தில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பொது வருவாய்**

**வருவாய் கணக்குகள்:**

அ) **பொது வருவாய் சொத்துவரி**

கட்டிடங்களின் மேல் விதிக்கப்படும் சொத்துவரி விகிதம் எல்லாக் காலியிடங்களுக்கும் சேர்த்து அரை வருடத்திற்குக் கட்டிடங்களில் வருடவாடகை மதிப்பில் இருந்ததை 1.04.2018 ல் இருந்து வரி சீராய்வு செய்யப்பட்டது.

தற்போதுள்ள வரிவிகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| General purposes | Scagening Tax | Street Lighting Tax | Water and Drainage tax | Education tax | Total |
|---|---|---|---|---|---|
| 8.25% | - | - | 3% | - | 11.25% |

1. அடிப்படை சொத்து வரி அரையாண்டு 10.25%
2. கல்வி வரி அரையாண்டு 0.0%
3. அடிப்படை சொத்து வரியில் நூலக வரி அரையாண்டு 1.0%

ஆ) **காலிமனைவரி:**

ஒவ்வொரு அரை வருடத்திற்கும் மண்டல வாரியாக (Zone-A-10பைசா, Zone-B-15பைசா, Zone-C-20பைசா) வீதத்தில் காலிமனைவரி வசூலிக்கப்படுகிறது.

2. **தொழில் வரி:**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் புதிய தொழில் வரிச்சட்டத்தின் பிரகாரம் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள்,தனியாக தொழில் நடத்துபவர்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

3. **வண்டி வாகன வரி:**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 4வது அனுபந்தத்தில் 20வது விதியில் கண்ட விகிதங்களின்படி வரி விதிக்கப்பட்டது.

## கேளிக்கை வரி:

இந்நகராட்சிப் பகுதியில் கேளிக்கை வரி ஏதும் விதிக்கப்படவில்லை.

**கேட்பு, வசூல், நிலுவை:**

அறிக்கையாண்டில் வரி வகை, வரியில்லாத வகையிலும் சேர்த்து மொத்த கேட்பு 385.42(இலட்சத்தில்) இந்த தொகையில் 234.07 லட்சம் வசூலிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 376.48(இலட்சம்) ஆக இருந்தது. இந்த தொகையில் 197.41 லட்சம் வசூலிக்கப்பட்டது

| 2021-2022-ஆண்டு நிலுவை மற்றும் நடப்பு வசூல் விபரம் | தொகை(இலட்சத்தில்) |
|---|---|
| சொத்துவரி | 86.06 |
| தொழில் வரி | 36.22 |
| குடிநீர்கட்டணம் | 66.72 |
| அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதும்(D&O) | 12.00 |
| நிலம் மற்றும் கட்டிட வாடகை | |
| SUC | 19.58 |
| பல்வகைவரவினங்கள் | 13.10 |

சிவில் வழக்குகளில் உட்படாத நிலுவைகள் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கடன்கள்நிலுவை:(1998-1999)**

| | | |
|---|---|---|
| 1. | UIDSSMT. | 380,89,641 |
| 2. | Govt Loan. | 17,441 |
| 3. | IUDP | 9,92,033 |
| | மொத்தம் | 390,99,115 |

நகராட்சி நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாக இல்லாததினால் கடன் கணக்கு முழுவதும் செலுத்தப்படாமல் தவணை பாக்கி ஏற்பட்டுள்ளது.

**தனியார் சந்தைகள்:**

நகராட்சி பகுதியில் தனியார் சந்தைகள் ஏதும் நிறுவப்படவில்லை.

**வண்டிப்பேட்டை:**

நகராட்சி வண்டிப்பேட்டைகள்:

1. நகரமன்றத்தால் வண்டிப்பேட்டை எதுவும் நடத்தப்படவில்லை.

**தனியார் வண்டிப்பேட்டைகள்:**

நடப்பு ஆண்டில் தற்பொழுது வண்டி பேட்டைகள் இல்லை.

**பேரூந்து நிலையம்:**

நகரமன்ற பேரூந்து நிலையம் ஒன்று பராமரித்து பேரூந்து நிலையத்தில் இருந்தும் அங்கிருந்த கடைகளிலிருந்தும் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.13.10/- லட்சம்.

**தணிக்கை:**

2021-2022 ஆண்டின் ஆரம்பத்தில் 535 தணிக்கைத் தடைகள் நிலுவையில் இருந்தன. அறிக்கையாண்டு இறுதியில் நிலுவையாயிருந்த தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்யப்படும்.

**வழக்குகள் :**

அறிக்கையாண்டில் 8 வழக்குகள் நிலுவைகள் இருந்தன.

## சொத்துவிபரம்

நகரமன்றத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் இதர சொத்துக்கள் உட்பட இந்நகராட்சியில் மொத்த உடைமைகளின் மதிப்பு ரூ.1,00,70,000/-

**பொது குறிப்பு:**

நகராட்சி நிதிநிலைமை பற்றாக்குறை நிலையில் உள்ளது. பொதுமக்களுக்குள் தேவையான நடைமுறையிலுள்ள வசதிகளையும் சேவைகளையும் தொடர்ந்து தேவைக்கேற்ப தகுந்தாற்போல் நகரமன்றம் பராமரித்து வந்துள்ளது. சாலை வசதிகளை மேம்படுத்த நிதி வசதி போதுமானதாக இல்லாததால் நிலுவையில் உள்ளது. நகரில் அமைக்கப்பட்டுள்ள விளக்கு வசதிகள் நன்கு பராமரிக்கப்பட்டது. தேவையான இடங்களில் புதிய விளக்குகள் மற்றும் கம்பங்கள் அமைத்து விளக்குகள் போடப்பட்டது. குடிநீர் விநியோகத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டது. பொது சுகாதாரம் நல்லமுறையில் பராமரித்து வர எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது.

ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி